Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 328

வெள்ளிக்கிழமை 20 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 03 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## வரைவுக்கு எதிரான மனுக்கள் 'அவுட்'

உயர்நீதிமன்றம் உத்தரவு

**கொழும்பு, ஒக்ரோபர் 20**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தனை மனுக்களையும், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் முடித்துக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. »11

## முழு அடைப்பு வெற்றிபெற மக்களே ஒத்துழையுங்கள்!

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தங்கள் வாக்கு அரசியலுக்காகப் போராட்டங்களை முன்னெடுக்கக்கூடாது. மக்கள் மயப்படுத்திய போராட்டங்களையே முன்னெடுக்கவேண்டும். எதிர்காலத்தில் »11

## தமிழர் தாயகத்தில் இன்று ஹர்த்தால்!

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்தக் ஹர்த்தாலால் »11

## சிறுவன் மீது கத்திக்குத்து

யாழ்., ஒக். 20

கத்திக்குத்துக்கு இலக்கான 11 வயதுச் சிறுவன் ஒருவன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் பலாலியில் நேற்று முன்தினம் »09

## முஸ்லிம் மக்களும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்ப »11

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## ஐ.நா.வின் ஆலோசனைகள் செவிமடுக்கப்படவில்லை!

கொழும்பு, ஒக். 20

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் தமது ஆலோசனைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை என ஐ.நா. நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதிகாரிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:- »11

## பொலிஸார் எனக்கூறி ரூ.23,000 'லபக்'!

யாழ்., ஒக். 20

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்குச் சென்ற சிலர், தம்மைப் பொலிஸார் »11

பரீட்சை நடக்குமா? இல்லையா?

## திணைக்களம் பந்தாட்டம்; மாணவர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழர் தாயகத்தில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதிலும், பாடசாலைத் தவணைப் பரீட்சை »11

## 25 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் எரிப்பு

உடுத்துறையில் விஷமிகளின் செயல்

யாழ்ப்பாணம், ஒக். 20

வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் இனம்தெரியாதநபர்களால் எரித்தழிக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறை ,10ஆம் வட்டாரம் கொடுக்கிளாய் பகுதியில் நேற்றுமுன்தினம் முன்னிரவு இந்தச் »09

## சாராய விற்பனை குறைவு; அமைச்சருக்கு கடுங்கவலை

கொழும்பு, ஒக். 20

இலங்கையில் 'கசிப்பு' இருப்பது சர்வதேச நாணய நிதியத்துக்குத் தெரியாது, சாராயம் விலை அதிகரிப்பால் விற்பனை 75 வீதத்தால் குறைவடைந்துள்ளது. எனவே, சாராயப் போத்தலில் »09

பொலிஸ்மா அதிபர் விவகாரம்;

## அரசமைப்புப் பேரவைக்கு அதிகாரங்கள் இல்லை!

கொழும்பு, ஒக். 20

பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கோ ,நீக்குவதற்கோ அரசமைப்புப் பேரவைக்கு அதிகாரம் கிடையாது என்று ஐக்கிய தேசியக் கட்சி »09

## எரிபொருள் தட்டுப்பாடு 2024 ஜூன் வரை இல்லை!



எரிசக்தி அமைச்சு தகவல்

கொழும்பு, ஒக். 20

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை, அவசியமான எரிபொருளுக்கான விலைமனுக்கோரல் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துவிட்டதால் அதுவரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது »11

யாழ். நெடுந்தூர பேருந்து நிலையம்

## புதிய போக்குவரத்து ஏற்பாடு வெளியானது வர்த்தமானியில்!

யாழ்ப்பாணம், ஒக். 20

தனியார் பேருந்துகள் அனைத்தும் நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்தே செயற்படவேண்டும் என்ற தீர்மானம் யாழ். மாநகரசபை ஆணையாளரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நெடுந்தூர பேருந்து தரிப்பிடம் தொடர்பில் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் »09



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தில் ரயில்கள் அனைத்தும் நிறுத்தப்படும்

மாங்குளம் புகையிரத நிலையத்தில் நாளை முதல் அனைத்து புகையிரதங்களும் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மக்களால் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பலதரப்பட்டவர்களின் முயற்சியால் தற்போது இது சாத்தியமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி 05.10க்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் 10.42க்கு மாங்குளத்தை வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும். (ஒவ்வொரு சனிக்கிழமைகளில்) யாழ் நிலா இரவு 10 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு மாங்குளத்துக்கு அதிகாலை 4.20க்கு வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும்.

(வெள்ளிக்கிழமை மட்டும்) காங்கேசன்துறையிலிருந்து மதியம் 1.15க்கு புறப்படும் குளிரூட்டிய கடுகதி ரயில் மாங்குளத்துக்கு பி.ப. 2.54 க்கு வந்தடைந்து கொழும்பை நோக்கிச் செல்லும். ஞாயிறு மட்டும் யாழ்நிலா ரயில் காங்கேசன்துறையிலிருந்து இரவு 9.30 க்கு புறப்பட்டு மாங்குளத்துக்கு இரவு 11.20 க்கு வந்தடைந்து கொழும்பு நோக்கிச் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# வடக்கு மாகாண மீன்பிடிக்கு பிரத்தியேக முதலீட்டு வலயம்



## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தகவல்

**யாழ்ப்பாணம், ஒக். 20**

**மீன்பிடித் தொழிலுக்கான முதலீடுகளை ஈட்டுவதற்காக வடமாகாணத்தில் மீன்பிடித்தொழிலுக்கு பிரத்தியேகமுதலீட்டுவலயமொன்றைநிறுவுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் கூறியதாவது:-

மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமன்றி நுகர்வோருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் இடைத்தரகர்கள் குழுவொன்று முறையற்ற இலாப மீட்டுகிறது.

சவால்களுக்கு மத்தியிலும் அந்த மாபியாவை கட்டுப்படுத்தும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

விநியோகஸ்தர்களிடமிருந்து ஒரு கிலோ மீன் 1,750ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் நேரடியாக இறக்குமதி செய்யும் போது ஒரு கிலோ 1,250 ரூபாவுக்கு வாங்கலாம். கூட்டுத்தாபனத்தின் மாதாந்த மீன் தேவை 50 ஆயிரம் தொன்னைவிடவும் அதிகமாகவுள்ளது. அதன் காரணமாக கூட்டுத்தாபனம் நட்டத்தையே சந்திக்க நேரிடுகிறது. வடக்கு மாகாணத்தில் மீன்பிடித் தொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் மீன்பிடித் தொழில் தொடர்பான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வந்து பெருமளவிலான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கமுடியும் - என்றார். (ச-44)

# ரணில் நாடு திரும்பியவுடன் அரசியலில் பெரும் மாற்றம்!

கொழும்பு, ஒக்.20

சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் அமைச்சரவையிலும், பாதுகாப்பு அணிகள் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்டத்திலும் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றம் கட்டாயம் இடம்பெறும் என்றும், இதன்போது தற்போதைய சுகாதார அமைச்சரும் விளையாட்டுத்துறை அமைச்சரும் மாற்றப்படலாம் என்றும் அறியமுடிகின்றது.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரம ரத்னவின் மூன்று வார கால பதவி நீடிப்பு இந்த மாத இறுதியில் முடிவடைகின்ற நிலையில், புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனின் பெயர் அரசமைப்புச் சபைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அவருக்குப் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் தெரியவருகின்றது. தேசபந்து தென்னக்கோனுக்குப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆதரவு அளித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஒன்றிணைவதற்கு முயற்சிக்கின்றது என்றும், கட்சியை மீண்டும் ஒன்றிணைத்து வலுப்படுத்துவதற்காக சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் கிராம மட்டத்திலிருந்து பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் பரந்த கூட்டணியின் கீழ் போட்டியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

# சடலம் மீட்பு

வவுனியா, ஒக். 20

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலம் நேற்றுமீட்கப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையப் பயணிகள் இருக்கையில் அடையாளம் தெரியாத நபரின் சடலம் உள்ளமை தொடர்பாக பொதுமக்களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-110)

# விவசாயிகள் மத்தியில் புதியவகைக் காய்ச்சல்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.20

விவசாயிகள் மற்றும் விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் லெப்டோஸ்பைரோசிஸ் எனப்படும் காய்ச்சல் பரவுகின்றது என்று தொற்றுநோய் பிரிவு ஆலோசகர் சமூக மருத்துவர் துஷானி டப்ரேரா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மழைகாலங்களில் எலிகளால் பரவக்கூடிய லெப்டோஸ்பிரோசிஸ் என்ற புதிய வகைக் காய்ச்சல் நீர்வழியாக விவசாயிகளுக்குப் பரவுகின்றது.

ஆண்டுதோறும் சுமார் 8 ஆயிரம் லெப்டோஸ்பிரோசிஸ் நோயாளிகள் அடையாளம் காணப்படுகிறார்கள். இந்தத் தொற்றுக் காய்ச்சலால் 125 இறப்புகள் பதிவாகியுள்ளன.

இரத்னபுரி, காலி, களுத்துறை, மாத்தறை ஆகிய மாவட்டங்கள் இந்தத் தொற்றால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன, ஆயினும் சமீபத்தில் கம்பஹா மற்றும் குருநாகலிலும் நோயாளர்கள் பதிவாகியிருந்தனர்.

கழிவுகளை நிர்வகிக்கவும், முறையான பாதுகாப்பு கியர் மற்றும் வடிகட்டிய குடிநீரைப் பயன்படுத்துதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனையை உடனடியாக அணுக வேண்டும் - என்றார். (எ-இ)



# ஹர்த்தாலை தோற்கடிக்க அரச தரப்புகள் சதிமுயற்சி

## நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழ் மக்களுக்கு எதிரான இன ரீதியிலான ஒடுக்குமுறைகளுக்கு உள்நாட்டு நீதிப்பொறிமுறை தீர்வாகாது என்ற யதார்த்தம் வெளிப்படுத்தப்படும் என்பதனால் அதனை சோபையிழக்கச் செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் அரசாங்கத்தால் எடுக்கப்படுகிறது என்று ரெலோவின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார். ஹர்த்தாலுக்கான மக்கள் சந்திப்பு அச்சுவேலியில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நீதித்துறை சுதந்திரமற்றுள்ளது என்பதை குருந்தூர்மலை விவகாரத்தில் பணியாற்றி அச்சுறுத்தல் காரணமாக பதவியையே விட்டு வெளியேறிய நீதிபதியின் நிலைமை புடம்போட்டுக் காட்டுகின்றது.


எமக்கு உள்நாட்டுப் பொறிமுறைகள் எதுவும் தீர்வைத் தராது என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கு நாம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டும். வெளிநாட்டு ஜனநாயக சக்திகள் எமது நிலைமை தொடர்பில் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும்.

இந்த ஹர்த்தாலை சோபையிழக்க வைக்கவேண்டும் என அரசதரப்பு செயற்படுகின்றது. தமிழ் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க வேண்டும் - என்றார். (ச)

# கடையடைப்புக்கு லெனினிசக் கட்சி ஆதரவு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவிருந்த ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை தமிழ்த்தேசியக் கட்சிகள் வடக்கு-கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்த அழைப்பை ஏற்றுப் புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிசக் கட்சி கடையடைப்புக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அனைத்து மக்களும் எவ்விதமான வேறுபாடுகளுமின்றிப் பேரினவாத அடக்கு முறைக்கு எதிரான நடவடிக்கை என்ற வகையில் கடையடைப்பை வெற்றிபெறச் செய்யவேண்டுமென மேற்படி கட்சியின் பொதுச் செயலர் சி.கா.செந்திவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வடக்கில்
# 9,543 ஏக்கர் காணி படையினர் வசம்!

விடுவிக்கப்பட வேண்டுமென சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஒக். 20**

**வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் 9543.18 ஏக்கர் காணிகள் படையினரின் வசமுள்ளன. அவற்றை விடுவித்து மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார் நாடாளுமன்றஉறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.**

வடக்கு மாகாணத்தில் முப்படைகள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தரவுகள் பெறப்பட்டு தயாரிக்கப்பட்ட தனது அறிக்கையை கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் 9543.18 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 4378.8 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2433.79 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1578.27 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 1021.55 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கருமே படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரவுகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திணைக்களப் மட்டங்களிடம் கோரியதற்கமைய பெறப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள இந்த அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-100)

## ஆலயங்களில் நவராத்திரி ஒலிபெருக்கிகள் அலறல்

தவணைப் பரீட்சை பாதிப்பு

பெற்றோர் கவலை

யாழ்ப்பாணம் , ஒக். 20

தவணைப் பரீட்சை இடம்பெறும் இவ்வேளையில் ஆலயங்களில் நவராத்திரியை முன்னிட்டு ஒலிபெருக்கிகள் அலறவிடப்படுகின்றன. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

நவராத்திரி காலப்பகுதியில் இம்முறை தவணைப் பரீட்சைகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வேளையில் ஆலயங்களில் நவராத்திரியை முன்னிட்டு ஏட்டிக்குப் போட்டியாக ஒலிபெருக்கிகள் அலறவிடப்படுகின்றன. இரவு 10 மணிவரை ஒலிபெருக்கிகள் ஒலிக்கவிடப்படுகின்றன.

இதனால் மாணவர்கள் தவணைப்பரீட்சைக்கு படிக்க முடியாது திணறுவதுடன் அவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது.

எனவே மாணவர்களின் கல்வியை கருத்திற்கொண்டு ஒலிபெருக்கிகளின் பாவனையை மட்டுப்படுத்த கோவில் தரப்பினர் முன்வரவேண்டும் - என்றனர். (ச-9)



## ஊறணி இறங்குதுறையில் மீன்பிடிப் படகுகள் தரிப்பு!

மாவட்டச் செயலர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 20

மயிலிட்டி, ஊறணி இறங்குதுறையை யாழ்.மாவட்டச் செயலர் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இறங்குதுறையில் மீன்பிடிப் படகுகளை மீனவர்கள் சிரமமின்றித் தரிப்பதற்கு ஏதுவாக மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து ஆராய்ந்தார்.

யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், வலி.வடக்குப் பிரதேச செயலர் உட்பட அரச அதிகாரிகள் பலர் இதன்போது உடனிருந்தனர். (ச-9)

# அஜித் மானப்பெருமவுக்கு அமர்வில் பங்கேற்கத் தடை

கொழும்பு, ஒக். 20

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெருமவுக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு 4 வாரங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க, உதய கம்மன்பில ஆகியோரும் கேள்விகளை எழுப்பினர். இதனால் ஆளும் மற்றும் எதிரணிக்கிடையில் கடும் சொற்போர் மூண்டது.

இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும எழுப்பி இருந்த கேள்விகளுக்கான பதில்களை வழங்குவதை, நேரத்தைக்கருத்திற்கொண்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நிராகரித்தார். இதற்கு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் சபையில் கூச்சம், குழப்பம் ஏற்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும சபாபீடத்தை நோக்கி வந்தார். ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்தனர். அஜித் மானப்பெரும செங்கோலைத் தூக்க முற்பட்டார். இதனையடுத்து சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் இடைநிறுத்தினார்.

நாடாளுமன்ற நிலையியற்கட்டளையின் பிரகாரம், சபை நடவடிக்கை இடம்பெறும்போது செங்கோலை அவமதிக்கும் வகையில் செயற்படுவது குற்றமாகும். அந்தவகையிலேயே அஜித் மானப்பெருமவுக்கு நேற்று முதல் எதிர்வரும் 4 வாரங்களுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை நேற்று சபாநாயகர் வெளியிட்டார். (ச-44)



## தினம் தெரியுமோ?

**இன்டைக்கு ஹர்த்தால். ஆனாலும் சில தியேட்டர்களில லியோ படம் ஓடத்தான் போகுது. பெடிபெட்டையள் எல்லாம் ஹர்த்தால் 'லீவை' இந்தமுறை லியோவோட கொண்டாடப்போகினம். தியேட்டர்காரரும் வழக்கத்தை விட இண்டைக்கு கூட 'ஷோ' போட்டு தங்கட கல்லாவை நிரப்பத்தான் போகினம். அப்ப பிறகென்னத்துக்கு ஹர்த்தால்? எண்டு எரிச்சல்தான் வருகுது. முந்தி ஹர்த்தால் எண்டால் , றோட்டில ஒரு ஈ, காக்கா கூட இறங்காது. இப்பிடியெல்லாம் கடையை மட்டும் பூட்டிப்போட்டு, தியேட்டரை திறந்துவைச்சு படம் காட்டுறதும் இல்லை. ஆனால் இப்ப ஹர்த்தால் எண்டாலே எல்லாருக்கும் பகிடியாப் போட்டுது. 'அவை ஹர்த்தாலை வைக்கட்டும் நாங்கள் எங்கட பாட்டைப் பாப்பம். அதுக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' எண்ட மனநிலையிலதான் கனபேர் இருக்கினம்.**

**ஹர்த்தால்எண்டதாலதியேட்டர்களும்பூட்டுப்படுகுதோ இல்லையோ எண்டுதியேட்டர்காரர் சிலரை ஆக்களை வைச்சு பட்சி கேட்டுப் பார்த்திச்சுது. ஒரு சில தியேட்டரில படம் ஓடேலை. சிலதில லியோ ஓடுமெண்டு சொல்லிச்சினம். 'எங்கட சனத்துக்காகச் செய்யிற ஹர்த்தால் தானே. ஒருநாள் பூட்டினால் என்ன?' எண்டு அவையைப் பட்சி கேட்டிச்சுது. அதுக்கு அவை 'லியோ நேற்றுத்தான் வந்தது. முதல் ஒருகிழமையிலதான் நாங்கள் போட்ட காசை எடுக்கோணும். அதைவிட இந்தமுறை கனமடங்கு காசு கூடக் குடுத்துத்தான் படத்தை எடுத்தனாங்கள். ஹர்த்தால் எண்டு ஒருநாளைக்கு தியேட்டரைப் பூட்டினால் ஒரேயடியாப் பூட்டவேண்டி வந்திடும். அப்பிடிப் பூட்டினாலும் ஏற்கனவே வெள்ளிக்கிழமை படம் பார்க்க ரிக்கெற் புக்கிங் செய்தவைக்கு நாங்கள் என்ன பதில் சொல்லுறது?' எண்டு அவையொரு விளக்கம் குடுத்திச்சினம்.இப்பிடியான விளக்கங்களை அவை 2009 க்கு முன்னுக்கு ஒரு ஹர்த்தால் நடந்தால் குடுத்திருப்பினமோ?**

**இப்பிடியெல்லாம் 'புக்கிங்' செய்த ரசிகர்கள் எல்லாம் பாவம் எண்டு கவலைப்படுற தியேட்டர்காரர் , 800 ரூபா வித்த ரிக்கெற்றை சடாரெண்டு 2000 ரூபாவா மாத்தேக்க மட்டும் உந்தப் பாவம், பணியாரமொண்டும் ஏன் பாக்கேலை? அதோட முதல்நாள் ஷோவுக்கு பள்ளிக்கூடப் பெடியள், வகுப்பை 'கட்' பண்ணிப்போட்டு போயிருக்கினம். ஒரு சில தியேட்டர்களில வெள்ளை யூனிபோர்மோடையும் படம் பாக்க பெடிப்பிள்ளையள் போனவையாம். அப்பிடி பள்ளிக்கூட நேரத்தில, வெள்ளை யூனிபோர்மோட பிள்ளையளை தியேட்டருக்க விடலாமோ? தங்கட கலெக்சனுக்காக பள்ளிக்கூடப் பிள்ளையள் மட்டுமில்லை , நேர்சரி படிக்கிற குழந்தையள் வந்தாக்கூட அப்பிடியே தியேட்டர்காரர் உள்ளுக்க விட்டிடுவினம் போல. அதோட ஹர்த்தால் வெள்ளிக்கிழமை நடக்கப் போகுது எண்டு ஒரு கிழமைக்கு முதலே சொல்லிப் போட்டினம். ஆனால் 'லியோ' படத்துக்கு முந்தநாள் தான் 'புக்கிங்' தொடங்கினது. அப்ப வெள்ளிக்கிழமைக்கு ரிக்கெற்றை விக்காம விட்டிருந்தால் சோலி ஒண்டுமில்லையே. ஹர்த்தால் எண்டு தெரிஞ்சும் , அண்டைக்கு படத்துக்கு ரிக்கெற்புக் பண்ணியிருக்கினம் எண்டால், வெள்ளிக்கிழமைக்கு படம் போட்டே தீருறது எண்டு தியேட்டர்காரர் முடிவெடுத்துப் போட்டினம் எண்டுதானே அர்த்தம். 'ஹர்த்தாலுக்கு நாங்கள் ஆதரவில்லை. கல்லா கட்டுறதுதான் எங்களுக்கு முக்கியம்' எண்டு வெளிப்படையாச்சொல்லாமல் எதுக்குதியேட்டர்காரர் சுத்திவளைச்சு கம்பி கட்டுற கதையெல்லாம் சொல்லுகினமோ தெரியேலை.**



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலி மிரட்டல் சதம்!

# பங்களாதேஷை நேற்று ஊதித்தள்ளிய இந்தியா



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், கோலியின் அபார மான சதமும், ஜடேஜா, பும்ராவின் பந்துவீச்சும் கைகொடுக்க பங்களா தேஷை மிகமிக இலகுவாகத் தோற்கடித்தது இந்திய அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி மிக அபாரமான ஆரம்பத்தைக் கண்டது. ரன்சிட் ஹசன், லித்தன் டாஸ் இருவரும் அற்புதமாக விளையாடினார்கள். அணி 93 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அபாரமாக ஆடிய ரன்சிட் ஹசனை வெளியேற்றினார் குல்தீப் யாதவ். அதிரடி வீரர் சான்ரோ 8 ஓட்டங்களுடன் ஜடேஜாவிடம் ஆட்டமிழந்தார். மிராஸ் 3, ஹிடோய் 16 என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க 179 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்தது பங்களாதேஷ்.

முஸ்டபிஷுர் ரஹிம், மகமதுல்லா இருவரும் இணைந்து பங்களாதேஷை கௌரவ நிலையை நோக்கி நகர்த்திச் சென்றனர். 38 ஓட்டங்களுடன் ரஹிமும், 46 ஓட்டங்களுடன் மகமதுல்லாவும் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 8 விக்கெட்களை இழந்து 256 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் பும்ரா, சிராஜ், ஜடேஜா மூவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு அணித்தலைவர் ரோகித் அமர்க்களமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை இலகுபடுத்தினார். கில்லும் ஒத்துழைக்க கிடுகிடுவென இந்திய அணி ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டது. அணி 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். சிறிது நேரத்தில் 53 ஓட்டங்களுடன் கில்லும் ஆட்டமிழந்தார். எனினும் மறுமுனையில் சிறப்பாக அடித்தாடிக் கொண்டிருந்தார் கோலி. 48 பந்துகளில் கோலியின் அரைச்சதம் பதிவானது. ராகுல் கோலியுடன் பலமான இணைப்பாட்டத்தை வழங்கினார். கோலியின் சதத்துக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்ட அதேநேரத்தில் இந்திய அணியின் வெற்றிக்கும் 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கோலியின் சதத்துக்கு வழியேற்படுத்தினார் ராகுல். கோலியே அனைத்துப் பந்துகளையும் எதிர்கொள்ளும் விதமாகப் பார்த்துக்கொண்டார். இறுதியில் சிக்சருடன் சதத்தையும், ஆட்டத்தையும் நிறைவு செய்தார் கோலி. ராகுல் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 16

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (20.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

ஆஸ்திரேலியா பாகிஸ்தான்

இடம் : பெங்களூர்
நேரம்: பி.ப. 2.00

PCB

# பாண்டியாவுக்குக் காயம் இறுதி அறிக்கை இன்று



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் இந்திய அணியின் சகலதுறை வீரர் பாண்டியா காயமடைந்தார். பந்துவீச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, தன்னைத் தாண்டிச் சென்ற பந்தை கால்களைக் கொண்டு தடுக்க முற்பட்டு நிலைதடுமாறி வீழ்ந்ததையடுத்தே அவர் காயமடைந்தார். தொடர்ந்து பந்துவீச இயலாததையடுத்து அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார். கோலி அந்தப் பந்துப்பரிமாற்றத்தின் எஞ்சிய பந்துகளை வீசி முடித்தார். இந்த நிலையில், பாண்டியாவின் காயம் தொடர்பில் நேற்று இரவே உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவரின் உபாதை தொடர்பான முழு அறிக்கையும் இன்று வெளியிடப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 14இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| செ.சுதர்சன் | கோப்பாய் தெற்கு | அ.மதுர்ஷா | கீரிமலை |
| சி.திருவரங்கன் | திருநெல்வேலி | இ.அர்ச்சனா | குடத்தனை |
| சு.சயந்தரன் | கொடிகாமம் | எப்.ஆதீனா | சங்கத்தானை |
| வி.ரெட்சன் | குருநகர் | சி.மதுமிதன் | ஊரெழு |
| இ.மனோகரி | பிறவுண் வீதி | ப.பரஞ்சோதி | ஆனைக்கோட்டை |
| கே.குணபாலன் | அளவெட்டி கிழக்கு | கே.கீர்த்திகா | விசுவமடு |
| ஏ.சிவானந்தன் | மன்னார் | ச.சஞ்சயன் | புதுக்குடியிருப்பு |
| சி.இந்துசன் | பூநகரி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மக்கள்மயப்படவேண்டும் போராட்டங்கள்

வடக்கு –கிழக்கு மாகாணங்களில் இன்று முழு அடைப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா அச்சுறுத்தப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டமையைத் தொடர்ந்து அதற்காக முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. பின்னர் கிழக்கு மாகாணத்தில் முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ள மயிலத்தமடு மேய்ச்சல் தரவை ஆக்கிரமிப்பு விவகாரத்தையும் முழு அடைப்புப் போராட்டத்துக்குள் தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளீர்த்துக்கொண்டன. தமிழ்த் தேசியக் கட்சிகளின் முழு அடைப்புக்கான நோக்கங்கள் சரியானவை. அதில் மாற்று நிலைப்பாடுகள் இருக்கமுடியாது. ஆனால் இதற்கான எதிர்ப்பு வடிவம் முழு அடைப்புப் போராட்டம் என்பது சரியானதா என்ற கேள்விக்கு பல்வேறு பதில்கள் இருக்கின்றன. இந்தப் போராட்ட வடிவங்களின் வெற்றி என்பது மக்களின் பங்கேற்பில்–முழு மனதான பங்கேற்பில்– தங்கியிருக்கின்றன. இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு மக்களின் ஆதரவு இருக்கின்றதா என்பது கூட போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த தமிழ்க் கட்சிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், தாங்கள் அறிவிக்கும் போராட்ட வடிவத்துக்கு மக்கள் பின்னால் அணி திரளவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். மக்கள் அந்த மனநிலையிலிருந்து –அத்தகைய கண்ணை மூடிக்கொண்டு அரசியல்வாதிகளை பின்தொடரும் நிலையிலிருந்து எப்போதோ மாறிவிட்டார்கள். ஏனெனில் மக்களுக்கான அர்ப்பணிப்பான அரசியல் தலைமை இல்லை என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.


தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமது காலத்தில் ஆயுதப் போராட்டத்துக்கான ஆதரவை தமிழ் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்தது. தமது பரப்புரைகள் ஊடாகவே மக்களிடத்தில் தமிழர்களின் உரிமைகளை உணரச் செய்திருந்தார்கள். அதை வென்றெடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். ஆயுதப்போராட்டம் மூலமே அது சாத்தியம் என்பதை மக்களுக்கு புகட்டினார்கள். இதனால்தான் அவர்களால் மக்கள் மயப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்கமுடிந்தது. அவர்களது கெரில்லா முறைமையான தாக்குதல்கள் மக்கள் ஆதரவு இல்லாமல் வெற்றிகரமாக அரங்கேறியிருக்கமுடியாது. இதற்காக அவர்கள் ஊர் ஊராக ஒவ்வொரு குடிமனை குடிமனையாக ஏறிப் பரப்புரையை முன்னெடுத்தார்கள். ஆனால் இன்றுள்ள தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்களாக இருக்கலாம், அந்தக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கலாம், கட்சித் தொண்டர்களாக இருக்கலாம் அவர்கள் எவருமே மக்களுடன் மக்களாக ஊடாடி பரப்புரை மேற்கொள்ளத் திராணியற்றவர்களாக உள்ளனர். மக்கள் அரசியலை முன்னெடுக்க விரும்பாதவர்களாகவும் உள்ளனர். தமது கட்சி அரசியலுக்காகவும் – தேர்தல் – வாக்கு வங்கிக்காகவுமே தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களை முன்னிறுத்தி போராடுபவர்களாகவும் உள்ளனர். இதில் எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியும் விதிவிலக்கல்ல. மக்கள் அரசியலுக்கு சாவுமணி அடித்து தேர்தல் அரசியல் என்று மக்களின் உரிமை அரசியலை எப்போது சுருக்கிக் கொண்டார்களோ அப்போதே மக்கள் இந்த அரசியல் கட்சிகளிலிருந்து தூர விலகிச் சென்று விட்டார்கள். மக்கள் ஆதரவில்லாத எந்தவொரு போராட்டமும் வெற்றியைப் பெற்றுத்தராது.

மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தால் தமிழர் தாயகம் கொதித்தெழுந்தது. முழு அடைப்பு மக்களின் பேராதரவோடு நடந்தேறியது. அரசியல் தலைமைகள் போராட்டத்துக்கு தலைமை தாங்கவில்லை. மக்களே அவற்றைத் தலைமை தாங்கி நடத்தினார்கள். அதைப்போலவே நீதிபதி விவகாரமும், மயிலத்தமடு விவகாரமும் உள்ளன. ஆனால் மக்களுக்கு அதன் பாதிப்பை உணரச்செய்து அவர்களை மக்கள் அரசியலுக்கு அணிதிரட்டுவதற்குத்தான் எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியாலும் முடியவில்லை.தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அரசியல் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சி தேர்தல் அரசியலை முன்னெடுக்கவில்லை. மாறாக மக்கள் அரசியலையே முன்னெடுக்கின்றது. இதனால்தான் தெற்கின் பெரும் தேசியக் கட்சிகளின் போராட்டங்களுக்குப் பணம் கொடுத்து ஆள்களைத் திரட்டி வருபவர்களைவிட ஜே.வி.பி.யின் போராட்டங்களுக்கு மக்கள் அதிகளவில் அணிதிரள்கிறார்கள். இந்த உண்மையை எங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள் உணர்ந்தால் மக்களை அரசியல் மயப்படுத்தினால் பொங்கு தமிழைத்தாண்டிய எழுச்சியான போராட்டம் கூட எமது மண்ணில் நடக்கலாம்.

## நாளொரு நல்வார்த்தை

வரலாறு நல்ல மனிதர்களின் வருகைக்காக ஒருபோதும் காத்திருப்பதில்லை. இருப்பவர்களில் ஒருவரைத் தேர்வு செய்து பயணிக்கிறது.

- ஏங்கெல்ஸ் -




# தேர்தல்முறைமை திருத்தம் கட்சித் தலைவர்கள் கூட்டம்

**கொழும்பு, ஒக்.20**

**நாடாளுமன்றத் தேர்தலில் கலப்பு வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்துவது, திருத்தம் செய்வது தொடர்பாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.**

எதிர்வரும் நாடாளுமன்ற வாரத்தில் மீண்டும் இவ்வாறானதொரு கலந்துரையாடலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், கலந்துரையாடலின் முடிவில் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பான யோசனைகளை அமைச்சரவையில் முன்வைத்த நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்சவும் கலந்துகொண்டார்.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி, சட்டத்தரணி சாகர காரியவசம், மஹிந்த அமரவீர, ஏ.எல்.எம். அதாவுல்லா , எஸ். சந்திரகாந்தன், ஏ. அரவிந்த் குமார், எம். ராமேஸ்வரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

எதிரணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில், றிசாத் பதியுதீன், மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஏ-இ)

# “இந்திய வம்சாவளித் தமிழர்கள்” அடையாள அழிப்பை ஏற்கோம்

## கிழக்கு ஆளுநர் கண்டனம்

கொழும்பு, ஒக். 20

பிறப்பு, இறப்புச்சான்றிதழில் இனத்தைக் குறிப்பிடுவது குறித்து பதிவாளர் நாயகத் திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதனூடாக இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எனும் அடையாளத்தை மடைமாற்றம் செய்ய முயற்சிக்கப்படுகிறது என்று கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது-

எம் இனத்தின் அடையாளத்தைதீர்மானிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

இலங்கையர் என்ற வகையில் தனது இனத்தை பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களில் குறிப்பிட இந்நாட்டுப் பிரஜை என்ற வகையில் அனைவருக்கும் உரிமை உள்ளது.

1948 ஆம் ஆண்டுகளில் பிரஜாவுரிமை இன்றியிருந்த எம் சமூகம் கிட்டத்தட்ட 40 வருட போராட்டங்களுக்கு பிறகு இந்திய வம்சாவளியினர் என்ற அங்கீகாரத்துடன் பிரஜாவுரிமை பெற்றது.

இந்த நிலையில் இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கைத் தமிழர்' என அடையாளப் படுத்த முற்படுவது எம் மக்களின் அடையாளத்தை மறைக்கும் ஒரு செயற்பாடாகும். இவ்வாறான சுற்றுநிருபங்களை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன் – என்றார். (ச)

| நாளை | 21.10.2023 சனிக்கிழமை ஐப்பசி 04 | சுபநேரம் : 03.02 – 04.32<br>ராகுகாலம் : 09.02 – 10.32 |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கு முயலவில்லை

## பாலித ரங்கே பண்டார கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 20

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்படவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார அறிவித்துள்ளார்.**

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று எதிரணிகள் வெளியிடும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

அதை நீக்குவது தொடர்பில் சட்டவரைவு எதுவும் தற்போது தயாரிக்கப்படவில்லை.

தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார். தேசியத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். வெற்றியும் பெறுவார் - என்றார். (எ-44)

# மின்கட்டண அதிகரிப்புக்கு எம்.பி.க்கள் பின்னடிப்பு

கொழும்பு, ஒக்.20

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருப்பம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் போது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். சர்வதேசச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின், நாட்டில் ஏனைய பொருள்களின் விலையும் அதிகரிக்கக்கூடும். இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதனால் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும் - என்றார். (எ-இ)

# பலஸ்தீன மக்களுக்காக யாழில் சனி போராட்டம்

கொழும்பு, ஒக்.20

பலஸ்தீன மக்கள் மீதான இன அழிப்பு தாக்குதலுக்கு எதிரான கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்று கூட வேண்டும் என்று சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் இணைச் செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்குக் கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் அரசாங்கத்தினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டுவருகின்றனர். குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூரத் தாக்குதலைக் கண்டிக்கின்றோம்.

காஸா மீதான ஆக்கிரமிப்புப் போரை தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டதற்கு ஒப்பானதாகப் பார்க்கப்பட வேண்டியதே. ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்து குரல் கொடுப்போம்.

இஸ்ரேலிய பயங்கரவாத ஆட்சியினர் காஸா மக்களுக்கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் சென்றடைவதைத் தடுத்ததோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்து வருகின்றனர்.

காஸா மக்களுக்கு எதிரான இந்தத் தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உக்ரைன் - ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஐக்கியநாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச் சார்பை நிரூபித்து நிற்கின்றது.

அந்த மக்களின் இறையாண்மைக்காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம் - என்றார். (எ-27)



கடும் வறட்சி எதிரொலி

# ஜம்போ கச்சானின் விளைச்சல் வீழ்ச்சி

கிளிநொச்சி, ஒக்.20

எல் - நினோ தாக்கத்தால் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஜம்போ கச்சான் செய்கை அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நாதன் குடியிருப்பு, பிரமந்தனாறு, உழவனூர் ஆகிய பகுதிகளில் ஜம்போ கச்சான் செய்கைக்கு சிறந்த இடமாக அடையாளப்படுத்தப்பட்டன.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செய்கை வெற்றியளித்த போதிலும், இந்த வருடம் கடும் வறட்சியால் அவ்வளவு பெரிதான விளைச்சல் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்த வருடக் காலநிலை மாற்றத்தால் தமக்கு இலட்சங்களில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (ம-113)



# மத்தியகிழக்கு போர் நிலைமை விவாதம் கோருகின்றார் விமல்!

கொழும்பு, ஒக். 20

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமையால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு விமல் வீரவன்ஸ தலைமையிலான 'உத்தர லங்கா' சபாகய அணி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமையை இதற்காக ஒதுக்கவேண்டும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம், அந்த அணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் கூடியது. அதில் கருத்து வெளியிட்ட கம்மன்பில மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமை இலங்கைக்கும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும்.

இலட்சக்கணக்கான இலங்கையர்கள் அங்கு வாழ்கின்றனர். தேயிலை உட்பட ஏற்றுமதி நடவடிக்கை பாதிக்கப்படும். எண்ணெய் விலை உயர்வு, எரிவாயு விலை உயர்வு உள்ளிட்டவையால் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பும் ஏற்படும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெளிநாட்டு முதலீடு, சுற்றுலா என சகல துறைகளிலும் இப்பிரச்சினை தாக்கம் செலுத்தும். மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமை இலங்கைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது தொடர்பில் வியாழக்கிழமை விவாதம் நடத்த அனுமதிவேண்டும்.

வியாழக்கிழமை நிறைவேற்றப்படவிருந்த விடயங்களை விவாதமின்றி நிறைவேற்றி, அந்நாளை இதற்காக ஒதுக்க வேண்டும் - என்றார்.

இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பதிலளித்தார். (எ-44)

# வாழைப்பழ ஏற்றுமதி ஆலைக்கு நேரில் சென்ற விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.20

புத்தூர் நிலாவரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாழைப்பழம் ஏற்றுமதி தொழிற்சாலையை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டார்.

அங்கு வாழைப்பழ ஏற்றுமதிச் செயற்பாடுகள் தொடர்பிலும் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் டொலர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஏற்றுமதியை அதிகரித்து அந்நியச் செலாவணியை ஈட்டவேண்டும். அதுவே எங்களுடைய இலக்கு. அதன் ஓர் அங்கமாகவே இந்த நிலையம் செயற்படுகின்றது.

கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச்செல்லவேண்டும். அதன்மூலம் மக்களின் பொருளாதாரத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்லமுடியும். இங்குள்ள வாழைப்பழம் டுபாய் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையின் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதனூடாக பொருளாதாரத்தில் முன்னோக்கிச் செல்ல முடியும் - என்றார். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துகளில் நால்வர் காயம்

சாவகச்சேரி, ஒக்.20

இரு இடங்களில் நடந்த சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் மீசாலையில் நடந்த விபத்தில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் சென்ற முதியவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-9)

# விபத்துகளைத் தடுப்பதற்காக கட்டாக்காலிகளுக்கு கட்டுப்பாடு

## வவு. தெற்கு பிரதேசசபை அதிரடி

வவுனியா, ஒக். 20

வவுனியாவில் அண்மைய நாள்களாக கட்டாக்காலிக் கால்நடைகளால் விபத்துகள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி நெளுக்குளம் மற்றும் மன்னார் வீதியில் நடமாடிய அதிகளவான மாடுகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட மாடுகளை உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-18)

## பெயர் மாற்றம்

வெற்றிலைக்கேணி முள்ளியான் யாழ்ப்பாணத்தில் வதியும் **வைத்தியான் பிள்ளை மரியாலூசியா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **வஸ்தியாம்பிள்ளை லூவிஸ்கா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வஸ்தியாம்பிள்ளை லூவிஸ்கா** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**வஸ்தியாம்பிள்ளை லூவிஸ்கா**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதி
## பண்பாட்டியலில் முதுமாணி
## (Master of Cultural Studies – MCST ) 2023/24 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் கலைமாணிப் பட்டம்
- தொழில்முறை அனுபவம் மற்றும் ஈடுபாட்டுடன் வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.
- யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடம் மற்றும் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் சமனான தகுதிகள்.

**தெரிவுமுறைமை :**

➤ **நேர்முகத் தேர்வு**

| | |
|---|---|
| கற்கைக் காலம் | : ஒருவருடம் |
| மொழி மூலம் | : தமிழ் |
| கற்கைநெறிக் கட்டணம் | : 135,000/- (5000/- மீள அளிக்கப்படும்) |
| விண்ணப்பப் படிவக் கட்டணம் | : 1,000/- |
| விண்ணப்ப முடிவுத்திகதி | : 10.11.2023 |

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் (190052550002134) எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் வலைதளவசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் மக்கள் வங்கியில் (190052550002134) எனும் கணக்கிலக்கத்திற்கு ரூபா 1000/- செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **10.11.2023** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**19.10.2023**

(cr 40801) (N.1)

## 1ஆம் ஆண்டுநினைவஞ்சலி
## அமரர் கணேசலிங்கம் துவாரகன்



**திதி : சஷ்டி**

ஆண்டு ஒன்று ஆனதுவோ!
நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக் கேங்குகின்றோம்!
நெஞ்சைத் தொட்டு நெகிழ்வோடு உறவாடி
மகிழ்வோடு கடந்த தம் இனிய வாழ்வின்
கடைசிப் பொழுதுகளிலும் - விழியோடு
கலந்து விட்டீர்கள்- எங்கள்
முகவரிகள் எப்போதும்
உங்கள் முகங்களே!

**தோற்றம்** 08.06.1976 **மறைவு** 31.10.2022

(CS 26652) A-1

**குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல : TR/65/2023
வழக்கின் தன்மை : நம்பிக்கைப்பொறுப்பு

1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 100,101,75 மற்றும் 112ம் பிரிவுகளின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விண்ணப்பம்

1. சாம்ஸன் ஞானகரன்
இல.276,கனகரட்ணம் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

2. பிரின்ஸ் டேவிட் கிருபாகரன்
பொன்னுத்துரை
இல213/3A,தலவத்துகொட,
மிரிஹான, கோட்டை.

**விண்ணப்பதார்கள்**

2023ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 20ம் திகதியாகிய இன்று.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள தர்மநம்பிக்கைப்பொறுப்பாதனத்தை தற்போது பராமரிக்க மற்றும் நிர்வகிக்க யாரும் காணப்படவில்லை என்பதாலும் குறித்த தர்மநம்பிக்கைப்பொறுப்பாதனத்தை நிர்வகிக்க வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளதாலும் பின்வரும் நிவாரணங்களை கோரி விண்ணப்பதாரர்களால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. குறித்த தர்மநம்பிக்கைப் பொறுப்பிற்கான புதிய நம்பிக்கைபொறுப்பாளர்களின் நியமனமும்
2. நியமிக்கப்பட்ட புதிய நம்பிக்கைபொறுப்பாளர்களிற்கு குறித்த நம்பிக்கைப் பொறுப்பாதனத்தை உரித்தாக்குகின்ற உரித்தாக்கற் கட்டளையும்
3. நம்பிக்கைப்பொறுப்பை முகாமை செய்வதற்கான திட்டமொன்றை நிர்ணயிக்கவும்

எனவே குறித்த தர்மநம்பிக்கைப்பொறுப்பாதனத்தில் அக்கறையுடைய நபர்கள் யாரேனும் இருப்பின் 24.11.2023ம் நாள் குறித்த வழக்கானது கௌரவ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் அழைக்கப்படும் போது தங்களிற்கு ஆட்சேபணை ஏதேனுமிருப்பின் மன்றிற்கு தெரிவிக்கலாம்.

**ஆதன அட்டவணை**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறையம் மேற்படி சுண்டிக்குளிக் கோவிற்பற்றுச் சிவியாதெரு இறையம் மேற்படிவலிகாமங் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறையும், "கலட்டிவளவும் ஓடைப்புலமும் மதபிரிவுகளும்" ப.நி.நெ.இலா.ருப குளி 60 கிணறுகளும் வைத்தியசாலைக் கட்டிடங்களும் பயிர்வகைகளும். இந்தப் பரப்பு ஐம்பது குளி பத்துக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் சபாபதி பெண் முத்துப்பிள்ளையின் ஆதனமும், வடக்கு சபாபதி பெண் முத்துப்பிள்ளையின் ஆதனமும், றோட்டும், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஒழுங்கையும் வெற்றிவேற்பிள்ளை சிவசுப்பிரமணியபிள்ளையின் ஆதனமும். இந்த எல்லைக் காணியடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும் குறித்த வைத்தியசாலைக் கட்டிடங்களும், வைத்தியசாலையிலுள்ள மரச்சாமான்கள், புத்தகங்கள், ஏடுகள், சத்திரவைத்தியகருவிகள், இன்னும் அதைச் சேர்ந்த சகல சாமான்களும்.
2. மேற்படி யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு கோவிற்பற்று சிவியாதெரு இறை "கிறுகிறுப்பைத் தாழ்வுவயல்" பர. நெ. இல. கர. பத்துக்கும் எல்லை கிழக்கு கதிரவேலன் பெண் பொன்னாச்சியின் ஆதனம்.வடக்கு கதிரன் பெண் நாகாத்தையின் ஆதனம். மேற்கு கந்தன் நாகமுத்துவுக்கும். முருகன் சின்னத்தம்பிக்குரிய ஆதனம்.தெற்கு இளையதம்பி ஆறுமுகத்தின் ஆதனம் இதடங்கலும்.
3. மேற்படி "பங்கடி வயற்" பர. நெ. இல. க. க./.2 ஒன்றரையும் பனைகளும் எல்லை கிழக்கு கதிரவேலு கைம்பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், வடக்கு நாகனின் ஆதனம், மேற்கு ஆறுமுகம் பெண் சின்னாச்சியின் ஆதனம், தெற்கு விசுவநாதர் பொன்னுச்சாமியின் ஆதனம் இதடங்கலும்.
4. மேற்படி "புளியடிவயல்" பர. நெ. இல. ரு ஐந்துக்கும் எல்லை கிழக்கு குமாருசங்கர பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்குஆறுமுகம் பெண் ஆச்சிக்குட்டியின் ஆதனம். மேற்கு குமாருவைத்தியலிங்கத்தின் ஆதனம். தெற்கு குமாருசங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குரிய ஆதனம் இதடங்களும்.
5. மேற்படி "அறுமன்புலம்" பர. றெ. இல. கஉ. பன்னிரண்டுக்கும் வடலிகளும் செய்பயிர் வான்பயிரும் மேற்கெல்லைக் கிணற்றில் இதற்குரியநாலில் மூன்றுபங்கும். இதற்குஎல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு வேலுப்பிள்ளைபெண் சின்னாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்குசுப்பையாபெண் இலட்சுமிக்கும் மறு பேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.
6. மேற்படி "துரவடிவயல்" பர.நெ.இல.கூ.சூ முப்பத்து மூன்று. இதற்கு எல்லை கிழக்கு வைத்தியர் வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு றோட்டு, மேற்கு கனபதியார் பொன்னுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு நாகன் கதிரவேலுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

**விண்ணப்பதார்களின் சட்டத்தரணி**

**பதிவாளர்**
**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகம் பிறக்கும்.
சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும்

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். லாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு செய்யவேண்டியிருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் உண்டாகும். தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.
வேங்கடேச பெருமாளை வழிபட, நன்மைகள்

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தரும்.
இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.
கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும் எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.
குடும்பத்தில் பெரியவர்கள் அனுசரணையாக

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.
சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

# கால்நடைகளைக் கட்டி வளர்க்குக

*யாழ்ப்பாணம், ஒக். 20*

*யாழ். மாவட்டத்தில் பரவலாக பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வயல்களில் பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு தற்போது நெற்பயிர்கள் முளைவிடத் தொடங்கியுள்ளன.*

*இந்தநிலையில் கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும். வயல்களுக்குள் கால்நடைகள் நுழைந்தால் அவை பிடிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ச-17)*


## CENTRE FOR HOLISTIC HEALING
## நிறைவாழ்வு மையம்

நிறைவாழ்வு மையத்தினால் நடத்தப்படும் " வெண்ணிலா " பெண்களிற்கான தையல் பயிற்சிநிலையத்தில் 8 மாதகால பயிற்சியை முடித்த பெண்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அவர்களால் தைத்த ஆடைகளின் கண்காட்சியும் இடம்பெற உள்ளது.

காலம் : 21.10.2023, 10am - 5pm
இடம் : மந்துவில் வடக்கு கொடிகாமம் பொதுநோக்கு மண்டபம்


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 28.02.1942 மறைவு 18.10.2023

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர்
Dr. திருமதி றாஜினி சிறீகஜன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மூத்துக்குமாரு தங்கேஸ்வரி**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்

(CS2551) (AK1)


## கார் விற்பனைக்கு

தனிப்பட்ட பாவனையில் உள்ள அல்ரோ (கிறே) கலர் கார் உடன் விற்பனைக்குண்டு (CAB XXXX).

077 748 8093


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## சபை நிதி - 2023

### வீதி விளக்குகளை கொள்வனவு செய்தல்

தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்குபிரதேச சபை.காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம். தகுதிவாய்ந்த வழங்குனர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது

கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்

தேவையான தகமைகள் கேள்வி ஆவணம் பகுதி 04 இல்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Sehedule) பகுதி 05 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு.வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:-0212241130. தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 20.10.2023 ஆம் திகதியிலிருந்து 06.11.2023 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் இடத்திலிருந்து 20.10.2023 ஆம் திகதியிலிருந்து 06.11.2023 வரைகாலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.4000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

கேள்வி இருபிரதிகளில் தயாரித்து தலைவர். பெறுகைக்குழு.வலிகாமம் வடக்குபிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் முகவரிக்கு 06.11.2023 திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 30 (முப்பது- நாட்கள் 04.12.2023) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(14) /05/CF/ S.Light 50W/02/ 2023 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (50Watt Single Eye High Power COB LED Street Light) | 1.0 | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 25,000.00 | 06.12.2023 |
| 02 | NP/14/41(14) /05/CF/ S.Light 30W/02/ 2023 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (30Watts Street Light) | 2.0 | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 50,000.00 | 06.12.2023 |

**திரு.சு.சுதர்ஜன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**
20.10.2023

(cr 40786 ) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In Loving Memory of

Born 01 03 1934

Death 19 10 2023



Mrs. Annaluxmy Mahadeva

It is with profound sadness, we announce the passing of our beloved mother, Mrs Annaluxmy Mahadeva. Loving wife of late Mr Kathirevelu Mahadeve and a cherished mother to Dushyanthi, Dharshini, and Anton Suresh. Annaluxmy's warmth and love also extended to her sons-in-law Sasikumar and Sivanathan, and daughter-in-law Rathika, and her grandchildren Shama Luxmy, Ajay, Kavin, Brinthan, and Barathan.

A memorial to express our final goodbyes will be held on, Sunday 22" of October 2023 at the Boyd chapel (Springvale Botanical Cemetery, Second Av, Springvale VIC), from 10.30am to 1:00pm, followed by a private cremation at 1.30pm.

+447949431180 Darshini +61421575008
Suresh +61418224604


# மருத்துவர் சிவரூபனின் வழக்கு ஒத்திவைப்பு!

பளை ஆதார மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி சிவரூபனின் வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாட்சிகளான இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கடந்த எட்டு மாதங்களாக கிளிநொச்சி மேல்நீதி மன்றத்துக்கு முன்னிலையாகியிராத நிலையில் வழக்கு நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றையதினம் சட்டமா அதிபர் திணைக்களத்தினர், வழக்கைக் கொண்டுநடத்துவதா அல்லது இல்லையா என்று அறிக்கையிட வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (அ-ம)

# இலங்கை நாடாளுமன்றில் காசா தொடர்பில் விவாதம்

கொழும்பு, ஒக். 20

இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினைக்கு அமைதியான தீர்வுகாண ஐ.நா. உடனடியாகத் தலையிட வேண்டும் என்று வலியுறுத்தி இலங்கை நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

ஆளும்கட்சி எதிர்க்கட்சியினரின் பொதுவான இணக்கப்பாட்டுடன் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அமைய விவாதம் நடத்தப்படும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதற்கான பிரேரணையை முன்மொழிய, ஆளும் கட்சியின் சார்பில் இது வழிமொழியப்படும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ-ம-44)

## சாராய...

விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் சாரம சம்பத் தஸநாயக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதி விசேட சாராயப் போத்தலொன்றை உபத்தி செய்வதற்கு ஆயிரத்து 200 ரூபாதான் செலவாகின்றது. எனினும், அது 3 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு போத்தலில் 2 ஆயிரம் ரூபா இலாபம் வைக்கப்படுகின்றது. 2019க்கு முன்னரான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சாராய விற்பனை 75 வீதத்தால் குறைவடைந்துள்ளது. ஆளுங்கட்சிக் குழுக்கூட்டத்திலும் இதுபற்றி கேள்வி எழுப்பினேன். ஐ.எம்.எப். யோசனை என்கின்றனர்.

ஆனால் இலங்கையில் கசிப்பு என ஒன்று இருப்பது சர்வதேச நாணய நிதியத்துக்குத் தெரியுமோ தெரியாது. விற்பனை குறைந்தால் எப்படி வருமானம் அதிகரிக்கும்? சாராயம் விற்க வேண்டியதில்லை எனில் விற்கவேண்டாம். ஆனால், அரசுக்கு வருமானம் வேண்டுமெனில் விலை குறைப்பு பற்றி சிந்திக்க வேண்டும். சாராயம் விலை அதிகரிப்பால் கசிப்பு உள்ளிட்டவற்றை நாடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசுக்கு வருமானம் வரவேண்டுமெனில், சாதாரண விலைக்கு சாராயம் வழங்கப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## புதிய...

மாநகரசபையின் அப்போதைய மேயர் தலைமையில், யாழ். மாநகர ஆணையாளர், பிரதம பொறியியலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், வட பிராந்திய பேக்குவரத்து அதிகார சபைத் தலைவர், போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, வட மாகாண தனியார் பஸ் நிலைய தலைவர் உட்பட்ட 15 பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாண தனியார் பஸ் நிறுவனத் தலைவர், தொல்பொருள் திணைக்களப் பிரதிநிதி ஆகியோர் பங்குபற்றிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கு அமைவாக, யாழ். மாநகரசபை எல்லைக்குள் மாநகரசபைக்குச் சொந்தமான நீண்டதூர பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேருந்து சேவைகள் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதியிலிருந்து உள்ளூர் சேவைகள், வெளியூர் சேவைகள், கொழும்புக்கான இரவு சேவைகள் என 3 வகையான சேவைகள் நடத்தப்படும்.

போக்குவரத்து பொலிஸாருக்கு உதவும் வகையில் மாநகரசபையால் திசை குறிகாட்டிப் பலகைகள் பொருத்தப்படும். எதிர்காலத்தில் போக்குவரத்துப் பொலிஸார் பஸ் செல்லும் பாதை தொடர்பாக விதிமுறைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

தனியார் உள்ளூர் சேவை பஸ்கள், நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச்செல்லும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேபோல் பிரயாணிகளை நெடுந்தூர பஸ் நிலையத்தில் இறக்கவேண்டும்.

இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு வெளிமாவட்டங்களுக்குச் செல்லும், நீண்ட தூரத்துக்குப் பயணிக்கும் பெரிய பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக சத்திரச்சந்தியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்து வெளி மாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்ளும் எனவும் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளும் இந்தப் பாதையையே பயன்படுத்துவது எனவும் இந்தப் பாதை ஒழுங்குமுறையானது உடனடியாக நடைமுறைப்படுத்துவது என்றும் இதற்குப் போக்குவரத்துப் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் நீண்ட தூரத்துக்குப் பயணிக்கும் பெரிய பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படிச் சந்திக்குச் செல்வது தடை செய்யப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமையை காரணம்காட்டி போக்குவரத்துப் பொலிஸார் இதனை மீறும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலையிலேயே வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து இது நடைமுறையாகும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (அ-ஒ-5)

## அரசமைப்புப்...

யின் தவிசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி சீனா சென்றுள்ளார். பொலிஸ் துறைசார் அமைச்சரும் நாட்டில் இல்லை. பாராளுமன்றத்துக்கும் அதிகாரமே அரசமைப்புப் பேரவைக்கு இருக்கின்றது. நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் உள்ளது. அந்த வகையில் ஜனாதிபதியும், பொலிஸ் துறை அமைச்சரும் நாட்டில் இல்லாத வேளை பொலிஸ்மா அதிபருக்கு 3 வாரங்களுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டமை சட்டபூர்வமற்ற செயற்பாடாகும்' - என்றார். (அ-ம-44)

## சிறுவன்...

இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் 21 வயது இளைஞர் ஒருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் (கிளினிக்) செல்வதற்கான முன்னேற்பாடாக தனது பெரியம்மாவின் பலாலி வீட்டுக்குச் சென்று அங்கு தங்கியிருந்துள்ளார். அந்தவீட்டில் கண் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் படுக்கையில் இருந்துள்ளான். இதன்போதே அந்தச் சிறுவன் மீது மேற்படி இளைஞனால் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படும் இளைஞர் பலாலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பலாலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-125)

## 25 லட்சம்...

செயல் இடம்பெற்றுள்ளது. அதேபகுதியை சேர்ந்த ஜெயராசா ஜெயரூபன் என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி வலைகள், படகு வெளியிணைப்பு இயந்திரம் உள்ளிட்ட சொத்துக்களே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஊடகவியலாளர் நிமலராஜனின் 23ஆம் நினைவஞ்சலி நேற்று!

யாழ்ப்பாணம், ஒக். 20
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் வடக்கு மாகாணத்தில் நேற்றுப் பரவலாக முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஊடக அமையம், வவுனியா ஊடக அமையம் என்பவற்றில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் ஜன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில், தான் எழுதிக்கொண்டிருந்த கட்டுரையின் மீது விழுந்தே அவர் உயிர் பிரிந்தது.

கொலையாளிகள் துப்பாக்கிச்சூடு நடத்திய பின்னர், நிமலராஜனின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதலையும் நடத்தினார்கள். இதன்போது நிமலராஜனின் தந்தை, தாயார் மற்றும் மருமகன் ஆகியோர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)



# பங்காரு அடிகளார் நேற்றுக் காலமானார்



சென்னை, ஒக். 20
தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூரில் அமைந்துள்ள அருள்மிகு ஆதிபராசக்தி பீட நிறுவுநர் பங்காரு அடிகளார் (வயது -83) நேற்று மாலை காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுசிறிது காலமாக அவர் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மாரடைப்பு காரணமாக நேற்று மாலை 5 மணியளவில் உயிரிழந்தார்.

மேல்மருத்துவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்கு வரும் பக்தர்களால் 'அம்மா' என்று அழைக்கப்பட்ட பங்காரு அடிகளார், ஆதிபராசக்தி தொண்டு நிறுவன மருத்துவக் கல்வி மற்றும் கலாசார அறக்கட்டளையின் தலைவராக இருந்தார். பெண்கள் எந்தநாளிலும் கருவறைக்குச் சென்று பூஜைகள் செய்யலாம் என்று ஆன்மீகத்தில் புதுமையை ஏற்படுத்தியவர் பங்காரு அடிகளார். அத்துடன் பல சீர்திருத்தங்களையும் செயற்படுத்தியுள்ளார். தென்னிந்தியா மட்டுமன்றி உலக அளவிலும் சக்தி வழிபாட்டுத் தலங்களை உருவாக்கிய பங்காரு அடிகளாரின் ஆன்மீக சேவையைப் பாராட்டி அவருக்கு 2019ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கி இந்திய மத்திய அரசு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

# விஜயகலா விடுதலை!

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் எழவேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டாரெனவும் அக்கருத்தானது அரசமைப்பின் 6ஆவது பிரிவின் திருத்தம், 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமாகும் என கொழும்பு குற்றப்புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்தனர்.

சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது சமர்ப்பணத்தில், விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றுகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்து அவர் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுப் பேசினார். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டுமாயின் அத்தகைய நிர்வாகம் ஒன்றினை தற்போது நாம் ஏற்படுத்தவேண்டும் என்று கருத்தியதாகவே அவரது கருத்து அமைந்திருந்ததேயன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றவில்லை என்ற சமர்ப்பணத்தையடுத்து 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி விஜயகலா மகேஸ்வரனை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இந்த வழக்கு நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக நேற்று அழைக்கப்பட்டபோது குற்றப்புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப்பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தமது சமர்ப்பணத்தில் 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழோ விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தேசிக்கவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் தங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதையடுத்து விஜயகலா மகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, விஜயகலா மகேஸ்வரனை விடுதலை செய்யுமாறு நீதிமன்றினை கேட்டுக் கொண்டதை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி காமினி திஸாநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா ஆகியோர் இவ்வழக்கில் ஆஜராகினர். (அ-ம-26)


## கேள்விஅறிவித்தல்
## PSDG நிதி - 2023
## துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்ட திட்டத்திற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர். பெறுகைக்குழு **துணுக்காய் பிரதேசசபை. முல்லைத்தீவு.** அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளி யிடப்பட்ட 4/2016(1) இலக்க 16.03.2016ம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக் கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
4. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி **(வீதி)** பொருத்தமானதரத்தில் ICTAD/CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி **4** இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக் குழு. துணுக்காய்** பிரதேச **சபை, துணுக்காய்** (தொலைபேசி இல:-021 228 4532/ 021 228 4926 E-mail:psthunukkai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் எனும் இடத்திலிருந்து 20.10.2023 ம் திகதியிலிருந்து 02.11.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் எனும் முகவரிக்கு **03.11.2023** ம் திகதி மாலை **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து **63** (அறுபத்து மூன்று) நாட்கள் (05.01.2024) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்.) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(05)/02/ Maint -01/2023 | Maintenance of Aninchiyankulam $1^{st}$, $2^{nd}$, $4^{th}$, $5^{th}$ Lane | 2.608Mn (வரி நீங்கலாக) | 84 நாட்கள் | C9,C8 & C7 (வீதி) | 40,000.00 | 02.02.2024 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் **31.10.2023** ஆம் திகதி **14.30** மணிக்கு துணுக்காய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**துணுக்காய் பிரதேச சபை, முல்லைத்தீவு, வடமாகாணம்.**
**20.10.2023**

(ம39908) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைவுக்கு...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சபாநாயகர் உறுதிப்படுத்தியுள்ள நிலையிலேயே, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படாத சட்டவரைவு தொடர்பில் விசாரணை நடத்தும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை என்று தெரிவித்தே மேற்படி உத்தரவு உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதி, நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திர பிரேரணை முன்னறிவித்தல் பிரிவில் இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டால் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பொதுமக்களால் சட்டவரைவை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும். ஆனால், பிரேரணை முன்னறிவித்தலில் குறிப்பிட்டதன்படி இன்னமும் சட்டவரைவு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த இழுத்தடிப்பு, பொதுமக்கள் இந்தச் சட்டவரைவை எதிர்த்து மனுத்தாக்கல் செய்வதற்குள்ள உரிமையைப் பறிப்பதற்கான அரசின் சதி என்று எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே உயர்நீதிமன்றம், நடாளுமன்றின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிரான மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஐ.நா.வின்...

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக, அதற்கு மாற்றாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்தது. எனினும், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவிலேயே திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. பொலிஸாருக்கு அளவுகடந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொலைத்தொடர்புத்துறையில் நீதித்துறையின் தலையீடு காணப்படுகிறது. ஒன்றுகூடல்களின்போது கைது செய்கின்ற விடயம் சட்டநியமங்களுக்குப் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. சித்திரவதைகளைத் தடுப்பதற்கும், கைதிகளை இடமாற்றம் செய்யும்போது இடம்பெறும் சித்திரவதைகளை தடுப்பதற்கும் நீதிபதிகளுக்கு போதியளவு அதிகாரம் வழங்கப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை சட்டத்தரணிகள் அணுகுவதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் எதுவித முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. பிற்போக்குத்தனமான அம்சங்களே காணப்படுகின்றன - என்றுள்ளது. (அ-ம-6)

## பொலிஸார்...

என்று அடையாளப்படுத்தி பணத்தை அபகரித்துச் சென்ற நிலையில், அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மேற்படி கடையில் பொலிஸார் என்று தம்மை அடையாளப்படுத்திய அவர்கள், கடையில் போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தேடுதல் நடத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். இதன்போதே கடையில் இருந்த 23 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்டு கடைக்காரர்களை மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இரண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர். (அ-ம-20-26)

## எரிபொருள்...

என்று மின்சக்தி மற்றும் எரிசக்தித்துறையின் இராஜாங்க அமைச்சர் எ.வி. சானக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக எரிபொருள் விலையில் ஏற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலும் பலஸ்தீனமும் எரிபொருளை உற்பத்திசெய்யும் நாடுகளாக இல்லாவிட்டாலும், எரிபொருள் தேசமான ஈரானுக்கு இந்த மோதல் நீளக்கூடிய சாத்தியம் காணப்படுவதாலேயே இந்த விலையேற்றம் பதிவாகியுள்ளது.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற பொதுவான கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. ஆனால், அடுத்த ஆண்டு ஜுன் மாதம் வரை, அவசியமான எரிபொருளுக்கான விலைமனுக்கோரல் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துவிட்டதால் அதுவரை இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. அத்துடன், எரிபொருளை விநியோகிக்கும் வாய்ப்பை சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு வழங்கியதன் மூலம் வருடத்துக்குச் சுமார் 500 மில்லியன் டொலருக்கு அதிகமான அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும் - என்றார். (அ-ம-44)

## முழுஅடைப்பு...

பொது அமைப்புகள் உட்பட அனைத்துத் தரப்புகளுடன் கலந்தாலோசித்து முழு அடைப்புப் போராட்டங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் அறிவிக்க வேண்டும். எனினும் இம்முறை முழு அடைப்பின் நோக்கங்கள் வெற்றிபெற பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளைய (இன்று) முழு அடைப்புப் போராட்டம் இரண்டு காரணங்களுக்காக நடத்தப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடுவில் தமிழ் மக்களின் மேய்ச்சல் தரவைகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்து இருக்கின்றார்கள். அடுத்தது எமது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியைத் துறந்து வெளியேறியிருக்கின்றார். நீதிபதியின் கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது. நீதிமன்றத்தின் கட்டளையை மீறி அமைக்கப்படும் விகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொலிஸார், விகாரை அமைப்பவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்றனர். இலங்கையில் சட்டத்தை இயற்றும் நாடாளுமன்றத்தில் நீதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு இந்த விடயங்கள் பகிரங்க எச்சரிக்கையை நாடாளுமன்ற

உறுப்பினர் விடுகின்றார். இவை எவையும் அவருக்கான அச்சுறுத்தல்களாக இருக்கவில்லையா?

இவையனைத்தும் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை கக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதச் சிந்தனையில் ஊறிய ஆட்சியாளர்களின் வெளிப்பாடு. அத்தகைய போக்கை நாம் அனுமதிக்க முடியாது. அது எமது இருப்பை கறையான் புற்றுப்போல அழித்து ஒரு நாள் முழுவதையும் சுரண்டிவிடும். இதற்கு எதிராக எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிக்காட்டவேண்டும். அதற்காகவே முழு அடைப்புப் போராட்டம் இடம்பெறப்போகின்றது. தமிழ் மக்களாக - தமிழ் பேசும் மக்களாக இந்த நாட்டின் சிங்கள பேரினவாதத்தால் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இனங்களாக ஒன்றாக - ஒரே குடையில் திரண்டு முழு அடைப்பை வெற்றியடையச் செய்ய ஒத்துழைக்கவேண்டும்.

முழு அடைப்புக்கான முடிவை எடுத்துவிட்டு சிவில் அமைப்புகள் உட்பட ஏனைய தரப்புகளும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சு நடத்தியது தவறு. சிவில் அமைப்புகள் உட்பட சகல தரப்புகளையும் உள்ளீர்த்து குறிப்பாக முழுஅடைப்பால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் தரப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களையும் உள்வாங்கி முழு அடைப்பு தொடர்பில் தீர்மானம் எடுத்திருக்கலாம். முக்கியமாக பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை நடக்கின்றது. ஆலயங்களில் நவராத்திரி நடக்கின்றது. இந்த முழு அடைப்பால் அவையும் நிறுத்தப்படப்போகின்றன. இது தொடர்பில் முற்கூட்டியே அந்தத் தரப்புகளுடன் கலந்து பேசியிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் இது தொடர்பில் சலசலப்பு வந்திருக்காது - என்றார். (அ-ம-125)

## தமிழர்...

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, குருந்தூர்மலை உள்ளிட்ட விவகாரங்களில் தீர்ப்பை மாற்றியெழுதுமாறு அழுத்தம் வழங்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்தும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், கிழக்கில் தமிழர்களின் வாழ்விடங்கள், பொருளாதார வளங்கள், மேய்ச்சல் தரைகள் சிங்களக் குழுக்களால் அபகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியும் இந்த ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஹர்த்தாலுக்கு வடமாகாண தனியார் ஊழியர்கள், சந்தை வியாபாரிகள், சிறு வர்த்தகர்கள், வணிக நிறுவனங்கள், போக்குவரத்துத் துறையினர் எனப் பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் இன்று தாயகத்தின் இயல்பு நிலை பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தவணைப் பரீட்சைகள் பாடசாலைகள் தற்போது இடம்பெற்று வரும்நிலையில், ஆசிரியர்களும், மாணவர்களும் இன்று பாடசாலைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஹர்த்தாலை ஏற்பாடு செய்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரியுள்ளன. இன்றைய பரீட்சைகளை பிறிதொரு தினத்தில் நடத்த உரிய ஏற்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்களை மேற்கொள்ளவேண்டும் என்று கல்வித் திணைக்களத்திடமும் அந்தக் கட்சிகள் கோரியுள்ளன.

இதேவேளை - ஹர்த்தாலால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்குவாரத்தைக் கருத்திற்கொண்டு பல்கலைக்கழகங்களின் பரீட்சைகள் இன்று இடம்பெறாது என்றும், அவை பிற்போடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு பெரும்பாலான சட்டத்தரணிகள் இன்று செல்லமாட்டார்கள் என்றும் புறக்கணிப்பார்கள் எனவும் தெரிய வருகின்றது. (அ-ம-26-100)

## முஸ்லிம்...

தாக யாழ். மாவட்ட முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். முஸ்லிம் இளைஞர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையானது உண்மையில் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கை மட்டுமன்றி ஜனநாயகத்தின் மிகப் பிரதான தூண்களில் ஒன்றான நீதித்துறையின் சுதந்திரத்தினையும் கேள்விக்குட்படுத்துகின்றது. ஆதலால், இத்தகைய செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது சுயநல அரசியல் இலாபத்துக்காக வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை கூறுபோட நினைக்கும் சக்திகளால் இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இருந்து தொடர்ச்சியாகவேமேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒருமித்த குரலில் ஒன்றிணைந்து இன்றைய ஹர்த்தாலை வெற்றிபெறச்செய்ய வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-27-26)

## திணைக்களம்...


கள் திட்டமிட்டபடி இன்று நடக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் நேற்று இரவுவரை தீர்க்கமான ஒரு முடிவைத் தெரிவிக்கவில்லை.

ஹர்த்தாலால் போக்குவரத்து முடங்கும் என்றும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால், பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வது சிரமத்துக்குள்ளானதாகவே இருக்கும். தவணைப் பரீட்சைகள் இப்போது இடம்பெறுவதால், பரீட்சை நடக்குமா? நடக்காதா? என்ற தீர்க்கமான முடிவை மாணவர்கள் கல்வித் திணைக்களத்திடம் எதிர்பார்த்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், 'பரீட்சைகளை நடத்துவதா? இல்லையா? என்பதை அந்தந்த கல்வி வலயங்களே தீர்மானிக்கவேண்டும்' என்று தெரிவித்திருந்தார். எனினும் கல்வி வலயங்கள் நேற்று தாம் சார்ந்த மாணவர்களுக்கு உறுதியான பதிலை வழங்கவில்லை. அதிபர்களிடமே இறுதி முடிவு என்று கல்வி வலயங்களும், கல்வி வலயங்களிடம் முடிவு என அதிபர்களும் மாணவர்களைப் பந்தாடிக் கொண்டிருந்தனர். இதனால் இன்றைய கல்வி நடவடிக்கை தொடர்பிலும் பரீட்சைகள் தொடர்பிலும் மாணவர்களிடம் குழப்பமான நிலையே இருக்கின்றது.

இதேவேளை, மாணவர்களின் நலன்கருதி பரீட்சைகள் பிற்போடப்படுவதாக பல்கலைக்கழகங்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி.யில் கசிப்புக்கோட்டை

# பொலிஸார் முற்றுகை 80 லீற்றர் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி, ஒக். 20
கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுடலைக்குளம் பகுதியில் கசிப்புக் காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டு சுமார் 80 லீற்றர் கசிப்பு, கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.
இராமநாதபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது.
பொலிஸாரைக் கண்டதும் சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் 18 ஆயிரத்து 750 லீற்றர் கோடா, 80 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன.
தப்பிச்சென்ற சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-113)



# நாரந்தனை அண்ணா உதைபந்தில் சம்பியன்

**யாழ்ப்பாணம், ஒக்.20**

**அம்மா அறக்கட்டளையின் ஆதரவுடன் வேலணை அம்பிகை நகர் சிறி மகேஸ்வரி விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.**

அமரர் சண்முகலிங்கம் சரஸ்வதியின் இரண்டாம் ஆண்டு நினைவாக இந்தத் தொடர் நடத்தப்பட்டது. தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் வேலணை அம்பிகை நகரில் உள்ள மகேஸ்வரி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. தாயக விடுதலை பயணத்திற்காய் தனது மூன்று பிள்ளைகளை வித்தாக்கிய சண்முகலிங்கம் சரஸ்வதியின் கணவர் ஈகைச்சுடரேற்றினார். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மலரஞ்சலி செலுத்தினார். அகவணக்கத்தின் பின்னர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் இறுதி ஆட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இறுதியாட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியும், ஊர்காவற்றுறை இருதய ஆண்டவர் விளையாட்டுக்கழக அணியும் மோதின. ஆட்ட முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி சம்பியனானது. (எ-125)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/134, ஜே/135, ஜே/136 கிராமஅலுவலர் பிரிவுகளுக்கான தேசிய அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவை தேசிய அடையாள அட்டைப் பிரிவினரால் கிராமஅலுவலர்களின் பங்களிப்புடன் கடந்த செவ்வாய்க்கிழமை நவாலி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)

# தென்மராட்சியில் வீடற்றோருக்கு வீடு

யாழ்ப்பாணம், ஒக். 20 தென்மராட்சிப் பிரதேசத்தில் நிரந்தர வீடுகளில்லாத குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2023ஆம் ஆண்டுக்கான வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 90 குடும்பங்களுக்கே இந்த நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (ச-9)

**வேலையாட்கள் தேவை**

காங்கேசன்துறையில் அமைந்துள்ள மருதம் பண்ணை (Farm) இற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு:
0777 474 498

14 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241



நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்விபயிலும் விசேட தேவைப்பாடுடைய குடும்பப் பின்னணி கொண்ட ஐந்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக மருத்துவ நிபுணர் லக்ஷ்மன் தம்பதியரின் நிதிப்பங்களிப்பில் மேசை, கதிரைகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன (ச-66)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **42 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
* **நிலப்பரப்பு**
* 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 0760 389

(CS 26653) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.